# கு.அழகிரிசாமியின் அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பில் சமுதாயச் சிந்தனைகள்

**வே.புளோரா பவுலின் மேரி,**
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை, ஜெ.அ.ம.கல்லூரி, பெரியகுளம். தேனி-625 601

**முன்னுரை :**

சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திக் கொண்ட ஒரு கூட்டமைப்பு ஆகும். சமுதாயம் என்பது மொழி, அரசியல், வரலாறு, மதம் போன்ற அமைப்புகளை முன் நிறுத்தி அமைகிறது. வரலாறு, மொழி, பொருளாதாரம், சட்டம், குடும்பம், சமயம், கல்வி, அரசியல், வணிகம், பண்பாடு போன்றவை சமுதாய நிறுவனங்கள் ஆகும்.

**சமூகம் விளக்கம் :**

"சமூகம் என்பதற்கு கூட்டம், திரள், சந்ததி முன்னிலை ஒரு சாதி அல்லது இனத்தார்"[1] என சொற்பொருள் விளக்கம் தருகிறது கழகத் தமிழ் அகராதி. "சமூகம் என்ற சொல்லின் வேர்ச்சொல் "சமு/சமு" ஆகும். சமுதாயம் என்ற சொல் கூட்டம் எனப்படும் மக்கள் தொகுதியைக் குறிக்கின்றது எனக் கழகத் தமிழ்க்கையகராதி சுட்டுகிறது"[2]

இத்தகைய மக்கள் தொகுதியைக் குறிக்கும் சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்கள், தீமைகள், போன்றவற்றைப் பற்றிய சிந்தனையே சமுதாய சிந்தனையாக கு.அழகிரிசாமி அவர்கள் தம் நூலில் கீழ்காணும் சமுதாயச் சிந்தனைகள் வெளிப்படுமாறு "அன்பளிப்பு" என்னும் சிறுகதைத் தொகுப்பைப் படைத்துள்ளார். அவற்றில் வரக்கூடிய ஒரு சில சமுதாயச் சிந்தனைகளை மட்டும் இங்கு காண்போம். 1. செல்வம், 2. மொழிபற்றின்மை, 3.ஏழ்மை, 4. இரக்கம், 5. கல்வி ஆகியவற்றைப் பற்றி பின்வருமாறு காண்போம்.

**1.1. செல்வம்**

மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று செல்வம். இத்தகைய செல்வம் இல்லையெனில் மனித வாழ்வு நகரமாகும். செல்வத்தின் சிறப்புப் பற்றி திருவள்ளுவர் தம் திருக்குறளில் கூறியுள்ளார்.

"இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு"[3] (திருக்-பா-752)

மற்று எல்லா நலமும் உடையவராக இருந்தாலும், செல்வம் இல்லாதவரைத் தாய் உட்பட எல்லாரும் இகழ்வர். வேறு எந்த நலமும் இல்லாதவராக இருந்தாலும் செல்வம் உடையவரை அரசன் உட்பட அனைவரும் மதித்துப் போற்றுவர் என்று கூறியுள்ளார்.

இதைப் போலவே அன்பளிப்பு என்ற சிறுகதைத் தொகுப்பில் ஆசிரியர் கு.அழகிரிசாமி அவர்கள் "சாப்பிட்டக்கடன் என்னும் சிறுகதையில் செல்வம் உடையவரின் உயர்வு பற்றியும் நிலை பற்றியும் கூறியுள்ளார்.

"கோமதிநாயகம் என்பவர் செல்வம் இருந்தும் மற்றவர்க்கு உதவும் குணநலம் இல்லாதவராக இருந்தாலும், ஊர்மக்கள் அனைவரும் அவரை முதலாளி என்று அழைத்து மரியாதை செலுத்தி வந்தனர். கோமதி நாயகத்தின் தகப்பனார் காலமானதும் குடும்பச் சொத்துக்கு கோமதிநாயகமே முதலாளியாகி விட்டான். அவனுக்கு உடன்பிறந்த தம்பியோ, அண்ணனோ கிடையாது. சுமார் ஐம்பதினாயிரம் பெறுமதிப்புள்ள சொத்துக்கு இவன் அதிபதியானதும், முன்னால் 'என்னப்பா' கோமதிநாயகம்! என்று சொல்லித் தோளில் கைபோட்டுப் பேசியவர்கள், இப்போது அவனை முதலாளி என்று கூப்பிட ஆரம்பித்தார்கள். வயது சென்ற கிழவர்கள் கூட ஏக வசனத்தில் பேசுவதை நிறுத்தி நீங்கள், நாங்கள் என்று பேசினார்கள்".

இச்செய்தியின் மூலமாக செல்வம் உள்ளவர் மக்கள் மரியாதைக்கு உரியவராக கருதப்படுவதையும், இல்லாதவர்கள் மரியாதை குறைந்தவர்களாகக் கருதப்படுவதையும் காணமுடிகிறது.

**1.2 மொழிப் பற்றின்மை :**

தாய்மொழி என்பது ஒருவனுக்கு பிறப்பு முதலே தோன்றியது. அவன் பிறந்த நாட்டில் பேசுகின்ற மொழி தாய்மொழியாகும். இதுவே அவனுக்கு முதன்மைமொழி அகும். இத்தகைய மொழியையே அவன் பிறப்பு முதல் கேட்டும் பேசியும் வளர்ந்து வருகிறான்.

தாய் மொழியின் சிறப்பினை உணராமல் பிறமொழியினைக் கற்று அதன் மீது மோகம் கொண்டவர்கள் பற்றி முடியரசு அவர்கள் கூறுகையில்,

"ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்
அன்னைமொழி பேசுவதற்கு நாணுகின்ற
தீங்குடை மனப்போக்கர் வாழும் நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி"[4]

என்று பிறமொழியைப் பயின்றுவிட்டு தாய்மொழியில் உரையாட வெட்கப்படுகிறவர்களை கண்டித்துக் கூறியுள்ளார்.

"கு.அழகிரிசாமி அவர்கள் எழுதிய அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் "இரண்டு ஆண்கள்" என்னும் சிறு கதையில் செல்லையாவின் மாமா இராணுவம் சென்று ஊர் திரும்பியதும் இந்துஸ்தானியைக் கற்றுக் கொண்டு "கா்மே அம்மா சௌக்கியமா! பெருமையோடு சொன்னார்". என்ற செய்தியின் மூலம் தாய்மொழியின் சிறப்பினை உணராதவர்களைப் பற்றியும் ஆசிரியர் இங்குச் சுட்டிக் காட்டியுள்ளார்".

### 1.3 ஏழ்மை

இன்றைய சமுதாயத்தில் ஏழ்மை என்பது அடிப்படை வசதிகள் கிடைக்காமல் அல்லல்படும் நிலையைக் குறிக்கும்.

ஏழைகளின் வாழ்க்கையைப் பற்றி அப்துல்ரகுமான் கூறுகையில்,

"வெயிலடித்தால் மண்மேடு
மழைவிழுந்தால் புதைசேறு
புயல் அடித்தால், காற்றாடி ஆகும் கூரைகூடு" [5]

என்கிறார்.

"தாயம்மாள் தீபாவளிக்காக தன் கணவன், குழந்தைகளுக்கு வாங்கி வந்த துணிகளைக் காண்பிக்கிறாள். அப்பொழுது பொட்டணத்தில் இரண்டு மல் பனியன்களும், இரண்டு கால் சட்டைகளும், ஒரு பாவாடையும், ஒரு பச்சை நிறமான சட்டையும், ஒரு நான்கு முழு ஈரிழைச் சிட்டைத் துண்டும் இருந்தன. துண்டைத் தவிர மற்ற உருப்படிகள் இன்னின்னாருக்குத் தான் என்று குழந்தைகளே போட்டுக் கொண்டனர். துண்டு யாரைச் சேருவது என்று தெரியவில்லை. உடனே செல்லையா கேட்டான் "துண்டு யாருக்கம்மா? "ஐயாவுக்கு" என்றாள் தாயம்மாள்". அப்படீன்னா உனக்கு என்று மங்கம்மாள் கேட்டாள். தாயம்மாள் சிரித்துக் கொண்டு "எனக்குத்தான் ரெண்டு சீலை இருக்கே இன்னும் எதுக்கு? எல்லாருக்கும் புதுத்துணி எடுக்க நாம் என்ன பணக்காரரா? ஏன்று கூறினாள். இச்செய்தியின் மூலம் ஏழ்மையின் காரணமாக சிறு பண்டிகையைக் கூட சந்தோஷமாகக் கொண்டாட முடியாமல் தவிக்கும் ஏழைகளின் நிலையை ஆசிரியர் இக்கதையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

### 1.4 இரக்கம்

இரக்கம் என்பது ஒருவரின் துன்பநிலைக் கண்டு மற்றவர் அவர் மீது கருணை கொண்டு உதவும் செயலாகும். இரக்கம் பற்றி முதுமொழிக்காஞ்சி தம் நூலில்,

"ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
பேரில் பிறந்தமை ஈரத்தின் அறிப"[7]
(9பதினென்-பா-1)

அறிஞர், கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் உள்ள மக்கள் எல்லாருள்ளும் ஒருவன் சிறந்த குடியில் பிறந்தமையை அவனுக்குள்ள அருள் இயல்பினாலே அறிந்து கொள்வர் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும்,

"ஈரம் உடைமை ஈகையின் அறிப"[8]
(பதினென்-பா-12)

ஒருவரது அருளுடைமையை அவரது ஈகைத் தன்மையினால் அறியலாம்.

### 1.5 கல்வி

கல்வி என்னும் அழியாச் செல்வத்தை ஒருவன் பெற்றால் அவன் புகழ் என்றும் அழியாது உலகில் ஓங்கி நிற்கும். தம் வாழ்க்கையை உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் அற்புத சக்தியே கல்வியாகும். இத்தகையைக் கல்விச் செல்வம் ஒருவனுக்கு உண்டாயின் பேரும், புகழும் அவனைத் தேடி வந்தடையும். கல்வி பெற்ற குழந்தைகளால் பெற்றோருக்கு ஏற்படும் மகிழ்ச்சியைத் திருவள்ளுவர் தம் நூலில் கீழ்காணுமாறு கூறியுள்ளார்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"[9]
(திருக்-பா-69)

தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்டத்தாய் தான் அவனைப் பெற்றெடுத்தப் பொழுதைவிடப் பெரிது மகிழ்வாள் என்று கூறியுள்ளார். இத்தகைய கல்வியின் சிறப்பு பற்றி,

கு.அழகிரி அவர்கள் எழுதிய அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள 'அழகம்மாள்" என்னும் சிறுகதையில் குறிப்பிட்டுள்ளார். "கோபால் உண்மையிலேயே ஒரு 'கிராமத்துப்பட்டதாரி' தான். அத்தோடு அவன் மேல் ஊராருக்கு நல்ல பிரியம். அன்று அவன் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கும் போது அந்த ஊர்ப் பெரிய பண்ணையாரே வந்து விட்டார். அந்தப் பண்ணையாரின் தம்பி வீட்டில் தான், கிருஷ்ணக்கோனார் வேலை செய்கிறார். சட்டபூர்வமான அதிகாரங்களைவிட, அதிக அதிகாரத்துடன் ஊரைப் பரிபாலனம் செய்யும் ஒரு பெரியவர், ஏழைக் குடிசையில் அன்று அடியெடுத்து வைத்தது கிருஷ்ணகோபாலுக்கே ஆச்சர்யமாக இருந்தது. வந்தவர் தன் மகனை மதுரையில் படிக்க அனுப்பும் விஷயமாகக் கோபாலுடைய ஆலோசனையைக் கேட்கலானார். பேச்சு அவ்வளவில் நிற்காமல் இருவரும் உலக சமாச்சாரங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். இதை வீட்டுக்குள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த அழகம்மாளின் மனம் சந்தோசத்தினால் பூரித்தது".

இச்செய்தியின் மூலம் கல்வியின் சிறப்பு பற்றியும், கல்வியினால் ஒருவர் அடையும் உயர்வு பற்றியும். கல்வி பெற்ற குழந்தைகளால் பெற்றோர் அடையும் மகிழ்ச்சி பற்றியும் ஆசிரியர் இக்கதையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

### முடிவுரை:

மேற்கண்ட செய்திகளின் மூலமாக சமுதாயத்தில் நிகழும் பிரச்சனைகள், செல்வம், மொழிப்பற்றின்மை, ஏழ்மை, இரக்கம், கல்வி போன்ற பல சிந்தனைகளை ஆசிரியர் தம் கதைத் தொகுப்பில் கையாண்டுள்ளதை நன்கு அறிந்து கொள்ள முடிந்தது சிறப்புக்குரியதாகும்.